13.02.2026

O.S.No. 194/2020

PW2– சிவக்குமார் – த/பெ. ராஜையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி /பிரதிவாதி தரப்பில்)

1. வாதி எனது தாயார் என்றால் சரிதான். நான் பி.ஏ வரலாறு படித்துள்ளேன். எனக்கு வழக்கின் விவரம் தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண்.418/22 ல் தென்பகுதி எங்கள் கைவசம் உள்ளது என்றால் சரிதான். 1ம் அட்டவணை வழக்கு சொத்தை வாதியும், நானும், கருப்பசாமியிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். தற்போது வாதி பெயரில் உள்ளது.

2. கருப்பசாமி, பால்ராஜ் அவர்களுடைய பாகபிரிவினை ஆவணத்தின் அடிப்படையில்தான் நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். பாகபிரிவினை ஆவணத்திற்கு முரணாக நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு தெற்கே எனது வீடு இருந்ததால், அந்த வீட்டிற்கு வடபுறமுள்ள சேர்ந்தணையாக இருந்த இடத்தை நாங்கள் வாங்கினோம் என்றால் சரிதான். வடக்கே பிரதிவாதி அனுபவம் செய்துவிட்டு, தெற்கே கருப்பசாமி வகையறாக்கள் எங்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டனர்.

3. 2010ம் ஆண்டு நான் வீடுகட்டினேன் என்றால் சரிதான். நான் வீடுகட்டும்சமயத்தில் பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். 2020ம் ஆண்டு தான் ஆக்கிரமித்து கழிவறை கட்டினார்கள்.

4. பிராது 1ம் தபசில் சொத்தை 01.07.2020ல் நான் வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். 20.07.2020ல் வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 2020ல் கழிவறை கட்டி ஆக்கிரமிப்பு செய்ததாக இந்த வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி கழிவறையை ஊர்மேலழகியான் ஊராட்சியில் இருந்து 2017ம் ஆண்டே கழிவறை கட்டிவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக 2017 மார்ச் மாதத்தில் கட்டிய கழிவறையை 2020ம் ஆண்டுகட்டியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் கழிவறை கதவில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. மேற்படி கழிவறையானது 2ம் தபசில் சொத்தில் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்ததால்தான் கழிவறை கட்டப்பட்டது என்றால் சரியல்ல. வடபக்கத்திலுள்ள எனதுசுவரின் சிலாப் 1 1/2 அடி அதிலிருந்து ½ அடி விட்டு தான் 2ம் பிரதிவாதி வீடுகட்டியுள்ளார் என்றால் சரிதான். எனது வழக்கு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. **நீதிமன்ற கேள்வி** – எப்போது பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் 2017ம் ஆண்டு தொடங்கி கிடங்கு வெட்டி, தண்ணீர் பைப்பை உடைத்து அதிலிருந்து எங்கள் வீட்டிற்கு வடப்பக்கமுள்ள இடத்திற்கு செல்லவிடாமல் தடுத்துவருகிறார்கள்.

நாங்கள் காவல்நிலையத்தில் புகார்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, முயற்சி செய்தோம் எங்கள் புகாரை எடுக்காததால்

நீதிமன்றத்திற்கு வந்துவிட்டோம். நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ள 2ம் தபசில் சொத்தை பல வருடங்களாக அவர்கள் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. முன்பிலிருந்தே எங்களை விரட்டிவருகிறார்கள், எங்கள் அனுபவத்தை இடைஞ்சல் செய்தது 2017ம் ஆண்டில் இருந்துதான்.

7. நாங்கள் ஆரம்பத்திலிருந்து 2ம் தபசில் சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. 2017ம் ஆண்டிற்கு பிறகுதான் பிரதிவாதிகள் பிரச்சனை செய்துவருகிறார்கள். நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி